# இரண்டாம் நாள்

## பிரபஞ்ச பேரன்பில் உலக அமைதிக்காக ஜெபிப்போம்

**முன்னுரை:**

அமைதி நிறைந்த, இந்த இயற்கை சூழலில் அமைதியாக வாழத் தெரியாத ஒரே ஜீவன் மனிதன் மட்டும் தான். உலக உயிர்களை வாழவைக்கும் வல்லமை தன்னிடம் இருந்தும் அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக உதித்து அமைதியாக மறைகிறது சூரியன். பூக்களின் வாசத்தை வீசிவிட்டு, ஒன்றும் தெரியாததைப் போல அமைதியாக இருக்கிறது தென்றல். மலை உச்சியில் இருந்து ஆர்ப்பரித்து கீழே விழுந்து நதியாக ஓடினாலும் அதிலும் ஓர் அமைதி இருக்கத்தான் செய்கிறது. இந்தப் பிரபஞ்சமே பேரண்டமாக இருந்தாலும் பரபரப்பு இல்லாமல் அமைதியாக நாம் பயணிக்க உதவுகிறது.

இந்த பிரபஞ்சம் ஒவ்வொரு தனி மனிதனிடமும் ஏதோ ஒரு வகையில் பேசிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வழிகாட்ட அமைதியாக பல அறிவுரைகளை காட்டுகிறது. மனிதன் அதனை சற்றும் கவனிப்பதில்லை. அமைதி அமைவதெல்லாம் அவரவர் பெற்ற வரம். புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்ற பாரதிதாசன் வர்ணித்த அற்புதமான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை விட வேறென்ன நமக்கு பெருமை இருந்து விடப் போகிறது.

மனித நேயமிக்க புனிதர்கள் மகான்கள் அவதரித்த அழகிய பூமி இது. ஆனாலும் இங்கே போர்களுக்கும் வன்முறைகளுக்கும் குறைவு இல்லை. இந்த உலகம் அமைதியான முறையில் அதனுடைய இயல்பிலேயே அனைவரும் வாழும் ஒரு அழகிய சொர்க்கமாக மாற வேண்டும். ஏனெனில் இது ஒவ்வொரு மனிதனின் மனதிலும் இருந்து தொடங்க வேண்டும். வன்முறைகளால் இந்த உலகை ஒருபோதும் ஆண்டு விட முடியாது என்பதையே தோற்றுப் போன பல சர்வாதிகாரிகளின் வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே வன்முறைகள் ஒழிந்து உலகம் அமைதியுற, அகில உலகமும் அன்னை மரி ஆங்காங்கே காட்சி கொடுத்து கேட்டுக்கொண்டபடி போர், பகைமை ஒழிந்து அமைதி பெற, தனிமனிதனாய் மண்ணிலிருந்து அந்த அமைதியைத் தொடங்க அருள் வேண்டி கையில் ஏந்திய இலக்கினை அன்னன மரி பாதம் சமர்ப்பித்து அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே என அர்ப்பணித்து இத்திருப்புகழ் மாலையில் செபிப்போம்.

**திருப்பா:**

அமைதியின் வடிவாய் அகிலத்தை ஆள்பவா
அன்பினால் எம்மை ஆட்கொண்ட தலைவா
அடியவர் என்றும் அமைதியாய் வாழ
இறையாம் நீர் மனிதரானீர்!

துன்பத்தை துயரத்தை எளிதாய் நீக்கிட
இன்பமாய் என்றும் இனிதே வாழ்ந்திட

அமைதி வழிகளைப் போதித்தீரே
உலகத்தை உம் வழி மாற்றினீரே!

அகிலத்தின் மேல் அன்பு கொண்ட தந்தைக்கும்
அமைதி அளித்திட்ட மகனுக்கும்
அருள்வழி நடத்திடும் ஆவிக்கும்
மாட்சி என்றும் உண்டாகுக - ஆமென்.

## திருப்பாடல்: 1

**முன்மொழி: "உலகத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக"**

இயேசு காற்றையும் கடலையும் நோக்கி "அமைதியாயிரு! என்றதும் மிகுந்த அமைதி உண்டாயிற்று. கடவுள் அமைதியைக் கொண்டு வருவது, இந்த பிரபஞ்சத்தை, இந்த இயற்கையை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோடு நின்று விட அல்ல, மனித உள்ளங்கனள பண்படுத்தி எல்லா மனிதரும் அன்பும், நீதியும் நிறைந்த உலகை உருவாக்க அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற சக்தியாக செயல்பட்டது. ஆக கடவுள் வாக்களிக்கின்ற அமைதி நம் உள்ளத்திலும், உறவுகளிலும், உண்மை அன்பிலும், இல்லத்திலும், உலகிலும் நிலவித் தழும்பிட இறைவனிடம் இந்த பாடல் வழி இறைஞ்சி மன்றாடுவோம்.

**பாடல்: அமைதியின் தெய்வமே இறைவா**

## திருப்பாடல்: 2

**முன்மொழி: "ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக"**

இவ்வுலகில் அமைதியை விரும்பாதோர் இல்லை. பிரச்சனைகள் இல்லாத அமைதியான வாழ்வே ஒவ்வொரு மனிதனின் அடிப்படை ஆசை. தொன்று தொட்டு மனித இனத்தின் புறஅமைதிக்குச் சவாலாக அமைவது போர்களே. ஆதி காலத்தில் காட்டு விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மனிதன் போராட வேண்டியிருந்தது. பின்பு தனது நாட்டின் பாதுகாப்புக்காக போராட வேண்டியிருந்தது. பின்பு தன் வலிமையை உலகுக்கு எடுத்துரைக்க மனிதன் போரை ஆயுதமாக்கினான். ஆனால் இன்று பழி வாங்கவும் சுயநலனுக்காகவும் போரிடத் துவங்கி விட்டான் மனிதன். நூற்றுக்கணக்கான போர்களாலும் அணு ஆயுத சந்தைகளாலும் உலகமே சீரழிக்கப்பட்டுள்ளது.

எனவே அமைதியான, போரற்ற, ஏற்றத்தாழ்வு இல்லாத உலகம் படைக்க, உறவால் மனிதன் உயிர் பெற அருள் வேண்டி இந்தப் பாடல் வழி இறைவனிடம் உலகைச் சமர்ப்பிப்போம்.

**பாடல்: உறவே மனிதம் உறவே புனிதம்**

திருப்பாடல்:3

**முன்மொழி: அவர் காலத்தில் நீதி தழைத்தோங்குவதாக! நிலா உள்ள வரையில் மிகுந்த சமாதானம் நிலவுவதாக.**

அமைதி - இது எங்குள்ளதோ அங்கு எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் மகிழ்வு நிறைந்திருக்கும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதியே மருந்து. ஒரு இடத்தில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பருந்து சற்று கீழே பறந்து வந்து ஒரு மீனைக் கொத்தி எடுத்து பறந்து சென்றது. மீனைப் பார்த்தவுடன் ஆயிரக்கணக்கான காகங்கள் பலத்த கூச்சலுடன் அந்த பருந்தைத் தாக்கியது. எந்த வழியாக பருந்து மீனைத் தூக்கிக் கொண்டு பறந்ததோ, காகங்கள் பின் தொடர்ந்தன. பருந்து கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, என திசை மாறி மாறிப் பறந்தும் காகங்கள் விடவில்லை. பருந்து குழப்பத்தில் அங்கும் இங்கும் பறந்ததில் மீன் அதன் வாயிலிருந்து நழுவியது. அந்த நிமிடமே அந்த காகங்கள் பருந்தை விட்டுவிட்டு மீன் பின்னால் பறந்தன. இவ்வாறாக கவலையிலிருந்து விடுபட்ட அந்தப் பருந்து ஒரு மரக்கிளையில் அமர்ந்து அந்த மோசமான மீன்தான் என்னுடைய அனைத்துச் சிக்கல்களுக்கும் ஆணிவேர். அது இப்பொழுது விட்டுத் தொலைத்ததனால் நான் அமைதியாக இருக்கிறேன் என்று நினைத்தது. ஒரு மனிதனிடம் உலக ஆசைகள் இருக்கும் வரை, அவன் அதை அடைவதற்கான முயற்சிகளைச் செய்து அதன் விளைவாக கவலை, எதிர்பார்ப்பு, மற்றும் அமைதியின்மையால் அவதிப்படக்கூடும். ஆசைகளை விட்டால் அமைதியை அனுபவிக்கலாம். ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றார் புத்தன், ஆசை நீங்கி தனிமனித அமைதி வேண்டி இந்தப் பாடல் வழி இணைவோம் இறையமைதியில்.

**பாடல்: அமைதி தேடி அலையும் நெஞ்சமே......**

## அருள்வாக்கு:

எங்கே நிம்மதி அங்கே எனக்கொரு இடம் வேண்டும் என்பது, மனிதனின் அமைதி தேடும் படலத்தின் பின்னணிப் பாடல். பொன் இருந்தும், பொருள் இருந்தும், பெண் இருந்தும், பெயர் இருந்தும் மனதிலும், குடும்பத்திலும் அமைதியில்லாது இந்தப் பின்னணிப் பாடலை முழங்கிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆமைதியைத் தேடி மதுவிலும், மாதுவிலும், புகையிலும், போதையிலும், மூழ்கிக் கொண்டிருக்கிறான் மனிதன். அமைதி தேடி
அலைமோதி நிலை குலையும் மனித சமுதாயத்திற்கு இயேசு பதிலாக, தீர்வாக இருக்கிறார். தன் தெய்வீக அமைதியில் நமக்குப் பங்கு தருகிறார்.

**இறைவார்த்தை: யோவான் 14: 27-29**

**சிறு மறுமொழி:.**

முதல் : அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என்ற இயேசுவைப்
பெற்றெடுத்த அன்னை மரியே நீர் பேறு பெற்றவள்!

அனை: அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என்ற இயேசுவைப்
பெற்றெடுத்த அன்னை மரியே நீர் பேறு பெற்றவள்!

முதல்: அகில உலகமும் அமைதியில் வாழ செபிக்க உணர்த்திய அன்னையே வாழி!

அனை: அமைதியை உங்களுக்கு..........

முதல்: தந்தைக்கும்........

அனை: அமைதியை உங்களுக்கு..........

**கன்னி மரியாவின் பாடல்:**

**முன்மொழி: ஆகட்டும் என்று இறைத்திட்டம் ஏற்ற தாயே! அமைதியற்ற எங்கள் உலகிற்கு உம் மகன் வாக்களித்த அமைதியைத் தாரும்.**

**மன்றாட்டு:**

இயேசு சாவிலிருந்து உயிர்பெற்றெழுந்து தம் சீடர்களுக்குத் தோன்றியபோது உங்களுக்கு அமைதி உண்டாகுக என வாழ்த்தினார். இவ்வாறு இயேசு வாக்களிக்கின்ற அமைதி உலகம் தருகின்ற அமைதி அல்ல. கடவுளிடமிருந்து வருகின்ற அமைதி. நம்மை கடவுளோடு ஒன்றிணைக்கின்ற சக்தி கொண்டது. இந்த அமைதியை உலகமோ உலகத்திலுள்ள எந்தச் சக்தியோ நமக்குத் தர, இயலாது எனவே இயேசு வாக்களித்த அந்த அமைதி நம்மில் நிறைவேற நாம் ஒருவர் ஒருவருக்காக செபிப்போம்.

★ இதோ என் தூதனை உனக்கு முன் அனுப்புகிறேன், அவர் உன் வழியை ஆயத்தம் செய்வார் என்ற இறை வார்த்தையின் படி கிறிஸ்துவின் வருகைக்காக மக்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தன் வாழ்வாலும், பணியாலும் மற்றவரை அமைதியான வாழ்வு வாழ வைக்கும் முன்மாதிரிகளாக தங்கள் வாழ்வை அர்ப்பணத்துடன் வாழ, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

★ உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று உரைத்த ஆண்டவரே! வன்முறை, பயங்கரவாதம், கொலை, கொள்ளை, இலஞ்சம், ஊழல் என்ற பல தீய செயல்களில் ஈடுபட்டு தன்னையும் தான் வாழும் சமூகத்தையும் சீரழிக்கும் தீவிரவாதம் ஒழியவும், நீதி நிறைந்த அரசாட்சி நிலவவும், எங்கும் அமைதி சூழல் உருவாக்கப்படவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

★ சமாதானத்தை உலகில் கொண்டு வர அமைதியின் அரசராக உம் மகனையே எங்களுக்காகக் கையளித்த இறைவா! பல்வேறு போட்டி, பொறாமை, சுயநலம், தற் பெருமை, வீண் பெருமை போன்றவற்றால் அமைதியான வாழ்வை இழந்து பிரிந்து வாழுகின்ற குடும்பங்களும், சகோதர சகோதரிகளும் கிறிஸ்துவ உறவால் மீண்டும் இணைக்கப் பெற்று சமாதானத்துடன் ஒன்றுபட்டு வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

★ அமைதியின் அரசரே, எம் இறைவா! உக்ரைன், ரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளின் ஒற்றுமைக்காகவும் சமாதானத்திற்காகவும் செபிக்கிறோம். சாதி, சமயம், மொழி, இனம், நாடு போன்ற வேறுபாடுகளைக் களைந்து மனித நேயம் பாதுகாக்கப்பட்டு நாட்டுத் தலைவர்கள் சமாதானத்தின் கருவிகளாகச் செயல்பட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

★ அன்பு தீவினையில் மகிழ்வுறாது என்ற பவுலடியாரின் வார்த்தைகளுக்கு இணங்க உலகில் பிரிவினையைத் தூண்டும் தீவிரவாதிகள் இயேசுவின் ஆழம், அகலம் என நிபந்தனை இல்லா அன்பை உணர்ந்து, தீவிரவாதத்தைக் கைவிட்டு,

அனைவரும் அமைதியான வாழ்வை வாழ்ந்து, மற்றவரையும் அமைதியுடன் வாழ வைக்க அருள் தர இறைவா உமஞ்மை மன்றாடுகிறோம்.

## இயேசு கற்பித்த செபம்..

## இறுதி மன்றாட்டு:

பரிசுத்த மரியே! இறைவனின் தாயே! எங்களின் அன்னையுமானவரே! அமைதியின் அரசரான இயேசுவிடம் எங்களை வழிநடத்த நீர் ஒரு போதும் தவறியதில்லை. புனித அன்னையே! போராட்டம் நிறைந்த இந்த உலகில் போரினால் ஏற்படும் வன்முறை, இறப்பு, இழப்பு, வறுமை, புலம்பெயர்ந்த நிலை, மன்னிக்கும் மனப்பான்மையின்மை, பொறாமை, கோபம் போன்ற அகப்பிணிகளையும் நீக்கி உண்மையான மன அமைதியை பெற்றவர்களாய் நாங்கள் முழு மன சுதந்திரத்துடன் அமைதியாக வாழ எங்களுக்காய் இறைவனிடம் மன்றாட அருள் தாரும். இவைகளை எல்லாம்...............